**கங்க இஹல கோரலை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கங்க இஹல கோரலை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 11 சனசமுக மண்டபங்கள், 15 மயான பூமிகள் மற்றும் 06 காணித் துண்டுகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், நிலையான சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 79,070 பெறுமதியான 02 கழிவுப்பொருள் வண்டிகள் மற்றும் உழவு இயந்திரத்தை திருத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 20,700 பெறுமதி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,750,996 ஆக காணப்பட்டது. அவற்றில் 05 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 739,078 ஆக காணப்பட்டது. 01 வருடத்திற்கு 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,222,019 ஆக இருந்ததுடன், 2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 12,926,494 ஆன மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,571,051 ஆன செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதியில் 05 ஆண்டு காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 82,142 ஆக

இருந்ததுடன், 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,583,905 ஆக இருந்ததுடன், 2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,614,788 ஆன மீதியொன்று மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 80,455,811 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.4 இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாகம்) விதி 218 | 89,602,563 | சபையிடம் உள்ள சகல காணி கட்டிடங்களும் வருடாந்த கணப்பீடொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 747,478 | 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 42 சந்தர்ப்பங்களுக்கரிய நிர்மாணவேலை நிறுத்தி வைத்தல்கள், நன்கொடைகள் மற்றும் முன்னைய காசோலைகள் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,821,559 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,977,226 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,936,000 | 2,046,294 | 2,041,893 | 1,422,056 | 1,603,210 | 1,685,717 | 2,093,186 | 1,417,153 |
| (ii) | வாடகை | 4,623,000 | 4,362,359 | 4,404,259 | 882,364 | 3,879,556 | 4,416,050 | 4,351,572 | 924,525 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 1,220,200 | 990,800 | 1,007,300 | 36,000 | 1,252,900 | 980,400 | 948,900 | 52,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 20,044,500 | 14,118,358 | 13,018,502 | 9,151,964 | 16,062,950 | 14,655,291 | 22,457,757 | 2,606,302 |
| | மொத்தம் | 27,823,700 | 21,517,811 | 20,471,954 | 11,492,384 | 22,798,616 | 21,737,458 | 29,851,415 | 5,000,480 |

## 2.2.2 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 5,000,480 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 11,492,384 ஆக இருந்தமையால் நிலுவை வருமானத்தின் அதிகரிப்பு 130 சதவீதமாக இருந்தது.

## 2.2.2 வீத வரி ஆதன வரியும்

(அ) வீத வரி

(i) வருடக் கணக்காக அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 201,745 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, 2018 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 169,286 தொகை மேலும் அறவிடப்பட்டிருந்தது.

(ii) 2017 சனவரி 07 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,181,113 ஆக இருந்ததுடன் 2017 திசெம்வர் 31 ஆந் திகதி வரை பட்டியலிடல் ரூபா 2,077,843 ஆக இருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் முறையே ரூபா 380,716 மற்றும் ரூபா 527,597 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது சதவீதமாக 32 சதவீதம் மற்றும் 59 சதவீதமாக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,169,530 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 987,139 மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதியில் 10 ஆண்டுகளுக்கு முன்னிருந்து அறவிடப்படாமல் காணப்பட்ட எனினும் ஆண்டில் பட்டியலிடப்பட்டு முன் கொண்டு வரப்பட்ட 67 வீதவரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீத வரி ரூபா 389,022 அறவிடுவதற்கோ அல்லது அறவிடாமல் இருப்பதற்கு காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நீர்வரி**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 169,757 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அம் மீதியிலிருந்து ரூபா 49,200 அறவிடப்பட்டிருந்தது. இது சதவீதமான 30 ஆக இருந்தது. இதன் பிரகாரம் நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுவது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 9624,264 தொகையானதுடன் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அம்மீதியில் ரூபா 327,147 தொகை அறவிடப்பட்டிருந்தது. இது சதவீதமான 35 ஆக இருந்தது. இதன் பிரகாரம் கடை அறவிடுவது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அத்கால வர்த்தக கடை தொகுதியின் 14 ஆம் இலக்க கடை உரிமையாளரிடமிருந்து ரூபா 52,700 கடை வாடகையக அறவிடுவதற்கு நடவடிக்க எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

2017 சனவரி 07 இல் உள்ளவாறு நிலுவை முச்சகர் வண்டிக் கட்டண மீதி மீதி ரூபா 148,500 ஆக இருந்ததுடன் 2017 திசெம்வர் 31 ஆந் திகதி வரை பட்டியலிடல் ரூபா 381,600 ஆக இருந்தது. அதில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் முறையே ரூபா 30,900 மற்றும் ரூபா 145,200 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது சதவீதமாக 21 சதவீதம் மற்றும் 38 சதவீதமாக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 354,000 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், வருமான அறவீடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 211,200 மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 352,163 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 8,445,001 தொகையும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. 2018 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 14,333 மற்றும் மொத்த நிலுவை முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**3.1. (அ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகள் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டு 2017 மார்ச் 24 மற்றும் 29, ஏப்ரல் 02 மற்றும் மே 09 ஆந் திகதிகளில் ரூபா 6,970,000

பெறுமதிக்கு தயாரிக்கப்பட்ட 38 அபிவிருத்தி முன்மொழிகள் அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு சமர்ப்பித்து 2017 யூன் 30 மற்றும் யூலை 11 ஆந் திகதிகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இந்த வகையில் பிரதேச சபை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகள் முன்னைய ஆண்டின் போது இனங்காணப்படாமையாலும் அங்கீகரித்து 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் பிரதேச அபிவிருத்தியை முறையாக நிறைவேற்றுவதற்கு உள்ள வாய்ப்பு விலகியிருந்தது. இதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட 7 முன்மொழிவுகளின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

(i) சபை அதிகாரப் பிரதேசத்திலும் வேறுபடுத்தாமல் நாளாந்தம் சேகரிக்கப்படும் 02 தொன் கழிவுகள் அளவில் கொம்போஸ்ட் உற்பத்தி, பாதுகாப்பான எரித்தல் அல்லது மீண்டும் பயன்படுத்தல் போன்ற நடைமுறைகளுடன் கூடிய கழிவுப் பொருள் முகாமைத்துவத்துவஒன்றில்லாமல் உலபனையில் அமைந்துள்ள தனியார்காணியொன்றில் இடப்பட்டு மண் இடப்பட்டிருந்தது.

(ii) கழிவுப்பொருள் வெளியேற்றப்படும் இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிதிஏற்பாடு நோக்கிற்குரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78(1) ஆம் பிரிவின் நோக்கங்களை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 145,000 நோக்கத்திற்கு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 04 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 190,000 நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவிடல் 9.9 சதவீதம் முதல் 63.3 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்காத காரணத்தினால் அந்நோக்கங்களுக்காக ஊலகலாவிய குறிகாட்டிகள் ஊடாக சபை அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதார எழுச்சி என்பவற்றிற்காக நீண்டகாலத் திட்டமொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) 2003 நவம்பர் 18 ஆந் திகதி பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்திற்கு இணங்க வெளித்தரப்பினரால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடமொன்று கவனயீனம் மற்றும் அதிகாரத்தை விஞ்சி நடவடிக்கை எடுத்த பிரதேச சபை தலைவர் உட்பட தரப்பினர்கள் 2008 யூன் 21 ஆந் திகதி அனுமதியற்றதென குறிப்பிட்டு உடைத்து அகற்றியமையால் உரித்தாளரினால் தொடப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 565,000 ஆன இழப்பீடு, சட்டத்தரணிகள் கட்டணம் மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 454,220 தொகையும் சபை அநிதியத்திலிருந்து

செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நி.பி 104(4) பரிசோதனையின் பிரகாரம் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் திணைக்கள கட்டணங்கள் உட்பட ரூபா 1,274,025 தொகையை இரண்டு முன்னால் தலைவர்களிடமிருந்தும் முன்னால் செயலாளர் மற்றும் வருமான பரிசோதகர்களிடமிருந்தும் அறவிடுவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி ரூபா 2,100 ஆன கட்டணத்தை அறவிட்டு நீர்ப்பாவனையாளருக்கு குழாய்களை இடுவதற்கு வீதியை துளையிடுவதற்கு பிரதேச சபை அனுமதியை வழங்கியிருந்தது, எவ்வாறாயினும் கவனயீனம் மற்றும் அதிகாரத்தை விஞ்சி நடவடிக்கை எடுத்து 2012 திசெம்பர் 04 ஆந் திகதி அந்த அனுமதியை இரத்துச் செய்தமையால் சபைக்கு எதிராக உரிய பாவனையாளரால் தொடரப்பட்ட வழக்கின் பிரகாரம் நீர்க்குழாய்களை புதைப்பதற்கு வீதியை தோண்டுவதற்கு மீண்டும் பரிந்துரையை வழங்க வேண்டுமென வழக்குத் தீர்ப்பொன்ற வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக செலிடப்பட்ட பணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட் நி.பி 104 பரிசோதனையின் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட வழக்குக் கட்டணம் மற்றும் திணைக்கள கட்டணங்களுடன் நட்டம் ரூபா 112,500 ஐ முன்னால் தலைவர் மற்றும் 10 உறுப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரூபா 198,180 பெறுமதியான 179 கல்வணைஸ் குழாய் பற்றாக்குறைக்குரிய தரப்பினரடமிருந்து அறவிடுவதற்கும் முறையான பரிசோதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 16 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) பிரதேச சபையின் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெவ்வேறு வெளிக்கள கடமைகளிலும் மேலும் 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு விடய கடமைகளுக்கு மேலதிகமாக வாரத்தில் 02 நாட்கள் வெளிக்களத்தில் ஈடுபடுவதற்காக கடமை கையளிக்கப்பட்டிருந்தது எஞ்சிய வேலத்திட்டங்கள் மற்றும் பின்னைய நிகழ்ச்சித்திட்டங்களின் பொது தகவல்களை சேகரிப்பதற்காக மாத்திரம் கடமை விபரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தமை 09 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இவவாறு வெளிக்களத்தில் ஆண்டுபூராகவும் செய்யும் வேலைகளை திட்டவட்டமாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே அவர்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் மேலும இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு செய்த முறை இனங்காண முடியாதிருந்தது.

## 3.4 செயற்பாட்டு திறமையீனங்கள்

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டங்களை அங்கீகரிப்பதற்காக 2014 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைத்திருந்த 536

விண்ணப்பங்களில் 333 இற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 24 விண்ணப்பங்களுக்காக மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) குருந்துவத்த வியாபார தொகுதியில் 29 கடைகள் உடன்படிக்கை ஒன்று இல்லாமல் வெளித்தரப்பினருக்கு மாதத்திற்கு ரூபா 3500 வீதம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அக்கால வர்த்தக கடை தொகுதியின் 13 ஆம் இலக்க கடை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வர குத்தகைக்கு வழங்க முடியாமல் மூடி வைக்கப்பட்டிருந்ததுடன் 07 கடைகள் உடன்படிக்கை கைச்சாத்திடாமல் வெளித்தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) அக்கால வர்த்தக கடை தொகுதியின் கடைகளுக்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளில் 06 ஆவது பிரிவின் பிரகாரம் குத்தகை வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகரிப்பதற்கு உட்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த போது 05 கடைகளின் வாடகையை திருத்துவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 செப்தம்பர் 27 ஆந் திகதி பொது சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வீதவரி அறவிடப்படக்கூடிய முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக 3107 அலகுகள் இணங்கானப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களுக்காக வீதவரி அறவிடுவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) குருந்துவத்த வர்த்தக தொகுதியின் 34 கடைகள் 2008 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரி உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தை திட்டவட்டமாக குறிப்பிடாமல் ‘‘நீண்டகாலம்’’ எனக்குறிப்பிடப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது அந்த உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் குத்தகை வாடகை 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிகரிப்பதற்கு உட்பட்ட வகையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**விளைவற்ற / குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

---

ரூபா 357,990 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரமொன்று, 02 மோட்டார் சைக்கில்கள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத 01 வாகனம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன.

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 112,420 பெறுமதியான கொங்கிரீட் எல்லை தூண்கள்மற்றும் ஹியும் குழாய்களுக்காக 106 கொலர் அலகுகள் மற்றும் 50 வொட் 32 CFL மின்குமிழ்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்டன.

**3.7 பெறுகை**

------------------

**பெறுகை திட்டங்கள்**

------------------------------------

ரூபா 19,570,638 ஆன மூலதனச் செலவினத்தை சபை செலவிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்கள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 03 வருமான விடயங்களில் 15 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையிலும் 06 செலவின விடபங்களில் 20 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | i | நிலுவை வருமான அறவிடப்படாமை |
| | | ii. | கடை வாடகை மதிப்பீடு செய்து அறவிடப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | i | கடைகள் உடன்படிககை செய்யப்படாமல் குத்தகைக்கு வழங்குதல் |
| | | ii. | காணி மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்படாமை |
| | | iii. | காணி கணக்கீடு செய்யப்படாமை |
| (இ) | நானாவித வைப்புக்கள் | i | நிமாண வேலை நிறுத்திவைத்தல் நீண்டகாலமாக தடுத்து வைத்தல் |
| | | ii. | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஈ) | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் | i | கழிவுப்பொருள் வேறாக்கப்பட்டு கையேற்கப்படாமை |
| | | ii. | கொம்போஸ்ட் உர உற்பத்தி தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை |
| | | iii. | முறையற்ற கழிவுப்பொருட்கள் அகற்றல் |